1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த இடத்தில் ஆளை விழுங்கும் சுறா மீன்கள் வருவதாகக் குறிப்பில் இல்லை. சாப்பிடக் கூடிய சுறா மீன்கள்தான் வருவதாகத் தெரிகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத்தோட்டம்

*40 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழமரத் தோட்டம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத் தோட்டம் செடிப்பண்ணை ஒன்றை அமைப்பதற்கான தகுந்த இடம் ஒன்று கிடைக்கப்பெறவில்லை. ஆயினும், இப்பழத் தோட்டத்தை அமைக்க, குடிமியாமலையில் உள்ள மாநில விதைப் பண்ணையில் ஒரு பகுதி நிலத்தை ஒதுக்குவது குறித்து வேளாண்மை இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: குடுமியாமலை தவிர வேறு புஞ்சைப் பகுதிகளில் இந்தப் பழத் தோட்டத்தை அமைக்க ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: திருச்சியில் மாகாளிப்பட்டி என்ற இடத்தில் இதை அமைக்க முதலில் திட்டமிடப்பட்டது. பின்னர் திருச்சியில் மத்தியப் பகுதியில் காட்டு நிலங்களில் அமைப்பது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் விவசாய ஆராய்ச்சி வல்லுநர்கள் அந்த இடங்கள் தகுதியானவை அல்ல என்று முடிவு செய்த காரணத்தால் அங்கே வைப்பது கைவிடப்பட்டு குடுமியாமலையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா: திருச்சி மாவட்டத்தில் குடுமியாமலைப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் போலவே அரியலூர் பகுதியிலும் மிகுதியான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் பழத் தோட்டம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி நிறுவனத்தால் மண் வளத்தைப் பார்த்து அந்த இடங்களை எல்லாம் அங்கீகாரம் செய்யவில்லை.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Agriculture the areas which are having suitable climatic conditions to start orchards in our State and areas where orchards had been started?

1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எந்த மாதிரியான இடம் எடுக்கப்பட வேண்டுமென்ற குறிப்பு இல்லை என்றாலும் தருமபுரி மாவட்டத்தில் திம்மாபுரம் என்ற இடத்தில் பண்ணை இருக்கிறது. எந்த வகையான நிலமாகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் வாங்கல்

***41 வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசு புதிதாக 'ஆழ்கடல் மீன் பிடிக் கப்பல்' (Traw'ers) வாங்க உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை வாங்க உத்தேசம் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) நான்கு மட்டும்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்களின் பதிலில் நான்கு கப்பல்கள் வாங்கப் போவதாகக் கூறினார்கள். இந்த நான்கு கப்பல்களை எப்போது வாங்க இருக்கிறார்கள்? அவற்றிற்கு எவ்வளவு விலையாகும்? அவற்றின் மூலம் நமக்கு எவ்வளவு அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 36 லட்சம் ரூபாய் செலவில் நான்கு படகுகள், ஒன்பது லட்சம் ரூபாய் வீதத்தில் இப்போது நாம் வாங்குகிறோம். அவற்றில் இரண்டு படகுகள் செப்டம்பர் மாதத்திற்குள் நம் கைக்கு வந்து சேர்ந்துவிடும். கல்கத்தாவில் உள்ள "ஹன்டர் யூல்" கம்பெனி இந்த இரண்டு படகுகளைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அவற்றை செப்டம்பர் மாதத்திற்குள் சேர்த்து விடுவார்கள். மற்ற இரண்டு படகுகள் "ஈஸ்ட் பங்கால் ரிவர் ஸ்டீம் சர்வீஸ்" லிமிடெட் என்ற நிறுவனத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு படகுகளை அக்டோபர் மாதத்திற்குள் தருவதாக அவர்கள் உறுதியளித்துள்ளார்கள். ஆக, நான்கு படகுகளும் நம் கைக்கு விரைவில் வந்து சேர்ந்துவிடும்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : தலைவர் அவர்களே, ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கக் கொடுக்கப்படுகிற படகுகளைக் கொண்டு கடற் கரையோரங்களில் கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கச் செல்கிற வர்களுக்கு இடையூறு விளைவிக்கிற விதத்தில் மீன் பிடிப்பதால் புன்னக்காயல், குளச்சல் போன்ற இடங்களில் மீனவர்கள் மத்தி யில் மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற பிரச்சனைகளில் அரசு கவனம் செலுத்தி ஆழ்கடலில் மீன் பிடிக்கக் கொடுக்கப்படுகிற படகுகளில் செல்கிறவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கும் விதத்தில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?